மாண்புமிகு திரு. செ. மாதவன்: துவக்க விழா செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஹைகோர்ட்டில் மெயின் பில்டிங்கில் ஒரு லிஃப்ட் வேண்டுமென்று கடந்த பத்து வருஷ காலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். லோ ஹவுஸ் பக்கத்தில் ஒவ்வொரு சேம்பருக்கும் இரண்டு மூன்று மாடி ஏற வேண்டியிருக்கிறது. ஒரு நாளைக்குப் பத்து முறையாவது ஏறி இறங்க வேண்டியிருக்கிறது. புதிய கட்டடம் கட்டுவதோடு கூட இந்த லிஃப்ட் அமைத்துக் கொடுக்க அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்களோடு நானும் படிகளில் ஏறி இறங்கியிருக்கிறேன். அங்கத்தினர் அவர்கள் கஷ்டப் பட்டதாகக் காணவில்லை.

திருப்பூர் நீதிமன்றக் கட்டடம்

* 232 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரத்தில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் இடம் குறைவாக இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இட வசதி செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இது உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. உயர்நீதி மன்றம் கோவை (மேற்கு) மாவட்ட நீதிபதியிடம், மாவட்ட முன்சிப்கோர்ட், சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட், திருப்பூர் இவைகளுக்குப் போதுமான இடவசதி செய்து கொடுப்பதற்கான திட்டத்தையும் மதிப்பீட்டுச் செலவையும் கேட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்தப் பரிசீலனை எவ்வளவு காலத்தில் முடிவு பெறும்? முடிவு பெற்ற பிறகு எவ்வளவு விரைவாக திருப்பூர் நகரத்தில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அறிக்கை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

Sugar from beet-root

* 233 *Q*.—THIRU A. M. RAJA: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start Beet Sugar Industry in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

1971 டிசம்பர் 10]

திரு. ஏ. எம். இராஜா : இந்த பீட்ரூட்டிலிருந்து சர்க்கரை 12 சதவிகிதம் கிடைக்குமென்று கூறப்படுகிறது. குளிர்ந்த பிரதேசங்களில் இது நன்றாக விளையும் என்று கூறப்படுகிறது. மேட்டுப்பாளையம், கோத்தகிரி போன்ற பகுதிகளில் பீட்ரூட் பயிர் செய்தால் அதன் மூலம் அந்தப் பகுதியில் பெரிய நாயக்கன்பாளையத்தில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்டிருக்கும் சர்க்கரை ஆலையில் சர்க்கரை உற்பத்திச் செய்ய வசதியாக இருக்கும். அந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய கரும்பு தேவையான அளவுக்கு இல்லாமல் இருப்பதோடு ரெக்கவரியும் அதிகமாக இல்லை. இதனால் அந்த ஆலையில் 10 அல்லது 20 லட்சம் ரூபாய் நஷ்டம் கூட ஏற்பட்டது. ஆகவே, அந்த ஆலையை கரும்பு ஆலையாக இல்லாமல் பீட் சர்க்கரை ஆலையாக மாற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நம்முடைய நாட்டுக்கு ஏற்றது தானா என்பதை முதலில் பரிசீலனை செய்ய வேண்டும். மேலும் இப்போது நாட்டில் இருக்கும் பிரச்சினை உற்பத்தியாகிற சர்க்கரையை எப்படி விற்பது என்பதுதான்.

Dam across Vaippar

* 234 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have any proposal to construct a dam at Vaippar; and

(b) if so, the estimated cost of the dam and the details thereof? முற் பகல் 10.00

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், வெம்பக்கோட்டை கிராமத்திற்கு அருகில் வைப்பாற்றுக்குக் குறுக்கே சுமார் ரூ. 34 லட்சம் செலவில் நீர்த்தேக்கம் ஒன்று கட்டும் திட்டம் பரிசீலனையிலுள்ளது. இந்த செயற் குறிப்பில் (1) 669 ஏக்கர் பரப்புள்ள புன்செய் நிலத்தை இரு போக நன்செய் நிலமாக மாற்றுதல், (ii) 393 ஏக்கர் பரப்புள்ள புன்செய் நிலத்தை ஒரு போக நன்செய் நிலமாக மாற்றுதல் ஆகிய பணிகள் அடங்கும். இதனால் கூடுதலாக 1364 டன் உணவுதானிய உற்பத்தி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு டன்னுக்கு செலவு ரூ. 2494 ஆக இருக்கும். இந்த செயற்குறிப்பு தற் பொழுது (பாசனத்) தலைமைப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு வரு கிறது.

DR. H. V. HANDE : Is it a fact that the original estimate was only Rs. 23 lakhs and this estimate was revised even before the work started? If the original estimate which was Rs. 23 lakhs was revised later on, may I know the reason therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் இரண்டு கட்டங் கள் அடங்கியது. சங்கரநத்தம் கிராமத்திற்கு அருகில் வைப்பாற்றிற்குக் குறுக்கே அணை கட்டுவதற்காக அரசால் ஒப்பளிக்கப்பட்ட பணிக்கு ரூ. 10.13 லட்சம் செலவாகலாமென மதிப்பிடப்பட்டது. ஆத்தங்கரை கிராமத்திற்கு